[29th January 1972

தவருன அறிக்கையினுல் ஒரு ஆசிரியர் குடும்பம் பல மாதங்கள் கஷ்டப்பட வேண்டிய நிலைமை ஏற்பட்டது என்பதை உணர்ந்து அதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தணிக்கை அதிகாரி அப்படி அறிவித்திருந்தார். அதன் பேரில் நிறுத்திவைக்கப்பட்டது. பிறகு பள்ளிக் கல்வி இயக்குனர் அவர்கள் உத்தரவிட்டு மீண்டும் சம்பளம் கொடுக்கப்பட்டது என்ற விவரமிருக்கிறது. வேறு வகையில் அதற்கு "எக்ஸம்ப்ஷன்" கொடுத்துத் திருத்தினர்களா என்ற விவரமில்லை. உண்மையிலேயே தணிக்கை அதிகாரி தவருகச் சொல்லியிருந்தால், அதற்கு நடவடிக்கை எடுக்கலாம்.

Office of the Commissioner for Government Examinations, Madras

* 58 *Q.*—THIRU D. SANTOSHAM :
THIRU M. RAJAH IYER : Will the Hon. the
THIRU V. ISVARMURTI :
Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the proposal to decentralise the office of the Commissioner for Government Examinations, Madras, as recommended by the Working Committee headed by the Hon. Minister for Education is still pending; and

(*b*) if so, the stage and the steps taken to fulfil the recommendation of the Committee ?

அரசினர் தேர்வுகள் ஆணையர் அலுவலகம்.

திரு. டி. சந்தோஷம் :
திரு. எம். ராஜா அய்யர் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி
திரு. வி. ஈஸ்வரமூர்த்தி :
நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாண்புமிகு கல்வி அமைச்சர் தலைமையிலுள்ள செயற்குழு செய்த பரிந்துரையின்படி சென்னை, அரசினர் தேர்வுகள் ஆணையர் அலுவலகத்தின் அதிகாரங்களைப் பரவலாக்கும் திட்டம் ஏதேனுமுண்டா ?

(இ) ஆமெனில், இக்குழுவின் பரிவுரையை நிறைவேற்றும் பணி எந்நிலையில் உள்ளது ? அவ்வாறு நிறைவேற்ற எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிர்வாகத்தில் ஏற்படக்கூடிய இடர்ப்பாடுகளின் நிமித்தம், தேர்வு ஆணையர் அலுவலகத்தைப் பிரிப்பது கைவிடப்பட்டது.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவர் அவர்களே, இப்போது இம்மாதிரிப் பரிட்சைக்கு உட்காரும் மாணவர்களின் எண்ணிக்கை மிகவும் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் ஒரேயிடத்தில் தேர்வுக் கமிஷனர்

29th January 1972]

Commissioner for Examinations அலுவலகம் இருப்பதை மூன்று பிராந்தியங்களில் பிரித்துவைப்பது நல்லது என்பதை அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறதா? அப்படி அந்தந்தப் பிராந்தியங்களில் இருந்து வருகிறவர்கள் அவர்களுடைய மார்க்குகளைத் தெரிந்துகொள்வதற்கு அல்லது அணுகுவதற்கு ஏற்ற நிலையில் டெபுடி கமிஷனர் அந்தஸ்தில் அதிகாரிகளை நியமித்து ரீஜனல் சென்டர்கள் மூன்றாவது ஏற்படுத்தி, அந்த இலாகாவில் டி-சென்ட்ரலைசேஷன் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ஒரு துணை அலுவலகம் மதுரையில் வைக்கலாமா என்ற கருத்து பரிசீலிக்கப்பட்டது. இங்கே ஒரு ஆணையாளரும் அங்கே ஒரு துணை ஆணையாளரும் வைப்பதன் மூலமாக அந்தப் பணியை இரண்டிடங்களில் வைப்பதை ஆராய்ந்த வரையில் செலவு அதிகமாக இருக்கும் என்பது ஒரு பக்கமிருந்தாலும், ஆணையாளரும் துணை ஆணையாளரும் அவ்வப்போது கூடிக் கலந்து பேசி நடவடிக்கை எடுக்க வேண்டியிருப்பதால், ஒரே இடத்தில் இருப்பது நல்லது என்ற முடிவுக்கு வந்தார்கள். தேர்வு நடத்துகிற ஆணையாளர்களைப் பொறுத்தவரையில், பல வகையாகப் பிரித்தாலும், ஒரே இடத்தில் வைத்தாலும், அவர்களது பணி ஒரே வகையாக அமைந்திருக்கிறது. அதை "டிஸ்ட்ரிபியூட்" செய்வதால் தனிப் பலன் எதுவும் ஏற்படப்போவதில்லை. தற்போது அந்த எண்ணம் கைவிடப்பட்டு, தற்போது இங்கேயே வைக்கப்பட்டு, சிலபல தொழிற் நுட்ப தன்மைகளைப் பொறுத்த வரையிலும், சுருக்கெழுத்து மற்ற தன்மைகளில் உள்ள தேர்வுகள் எல்லாம் தொழில்நுட்பக் கல்வி துறைக்குக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. இப்போது அவர்களே நடத்துகிறார்கள். இவற்றைப் பிரித்து வைத்தால், பலன் ஏற்படும் என்று தெரிந்தால், பிறகு பரிசீலிக்கலாம். தற்போது அந்த எண்ணம் இல்லை என்பதால் கைவிடப்பட்டிருக்கிறது.

Train Services from Mettupalayam to Ootacamund

* 62 *Q.*—THIRU P. THIRUGNANASAMBANDAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that the train services from Mettupalayam to Ootacamund are to be cancelled by the Central Government; and

(*b*) whether the State Government will take steps to continue the train service?

மேட்டுப்பாளையம்-உதகை புகைவண்டி

திரு. பி. திருஞானசம்பந்தம்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டி செல்கிற புகை வண்டியை மத்திய அரசு நிறுத்தப் போவதை அரசு அறியுமா?

(இ) அதைத் தொடர்ந்து நடத்த மாநில அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. எல். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆதாயமில்லாத எந்தப் பாதையையும் அகற்றுவது தங்கள் விருப்பம் அல்ல என்று 5—7—1969 தேதி யன்று மாநில அரசுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பொழுது மைய அரசினால் அமைக்கப்பட்ட ஆதாயமில்லாத கிளை இருப்புப்பாதைகளின் குழுவின் தலைவர் தெளிவு படுத்தியிருக்கிறார்.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.